**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# The State of the friend in the Secret Life found in Agam Literature

**R. Vijaya,** Research Scholar of Tamil, A.P.C. Mahalakshmi Women's College, Thoothukudi,
Affiliated with Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-0435-9152
**Dr. S. Vijaya Kalaivani,** Associate Professor of Tamil, A.P.C. Mahalakshmi Women's College, Thoothukudi,
Affiliated with Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-9812-0267
**DOI: 10.5281/zenodo.7313104**

## Abstract

*Sangam literature is the primary literature of Tamil. All the internal (agam) literature in it depicts the family life of the people living during the Sangam period. In inner life, they give Pangan to the leader and companion to the leader. The friend is the character who understands the heroine's feelings better than her parents. Her efforts to keep the leader and the leader together are an expression of her subtle intelligence and her literary pleasure has become fearful and ambitious, and the friend occupies a special place in the life of the thief and the chastity of the inner literature. The leader is not only a bridge that unites the leader but also a mirror that explains the character of the leader and the friend proudly tells the leader about the character, action, valor and love of the leader. This article on the role of a friend in the life of a thief in eights is to be approached with a psychological approach.*

**Keywords:** Society Literature, Leader, Leader, Friend, Psychology.

## References

[1] Jeypal, Ira. *Sangam Literature-Akananoor*. Chennai First Edition– 2004
[2] Dakshinamurthy. *Sangam Literature*. Five Hundred New Century Book House, Chennai First Edition – 2004.
[3] Nagarajan.V. Sangam Literature – Kurundogai New Century Book House, Chennai, First Edition– 2004.
[4] Balasubramanian, G.V. *Sangam Literature-Natinai*. New Century Book House, Chennai, First Edition – 2004.
[5] Viswanathan, A, *Sangam Literary Studies*. New Century Book House, Chennai, First Edition-2014.
[6] Young Puranar. *Tolkappiyam – Economic Power*. Saradha Publishing House, Chennai, 11th Edition- 2014.
[7] Poet's Child (Text). *Tolkappiyam – Economic Power*. Bari Station, Chennai, First Edtion – 1962.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# அக இலக்கியங்களில் களவில் தோழியின் மனநிலை

**இரா. விஜயா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD:** https://orcid.org/0000-0003-0435-9152
**முனைவர் சு. ,விஜய கலைவாணி,** இணைப்பேராசிரியர் ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD:** https://orcid.org/0000-0002-9812-0267
**DOI: 10.5281/zenodo.7313104**

### ஆய்வுச்சுருக்கம்

*சங்க இலக்கியம் தமிழனின் முதன்மை இலக்கியமாகத் திகழ்கிறது. இதிலுள்ள அக இலக்கியங்கள் அனைத்துமே சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் குடும்ப வாழ்க்கையை சித்தரிக்கின்றது. அக வாழ்க்கையில் தலைவனுக்கு துணை நிற்பவனைப் பாங்கன் என்றும் தலைவிக்கு துணை நிற்பவளைத் தோழி என்றும் வழங்குகின்றன. தலைவியின் உணர்வுகளை பெற்றோரை விட மற்றோர்களைவிடவும், மிகச் சிறப்பாக புரிந்து கொள்ளும் பாத்திரமாகத் தோழி விளங்குகிறாள். தலைவியையும், தலைவனையும் சேர்த்து வைக்க அவள் மேற்கொள்ளும் முயற்சிகள் அவளது நுட்பமான அறிவாற்றலை வெளிப்படுத்துவனாக இருப்பதோடு இலக்கிய இன்பம் பயக்கக் கூடியதாகவும் மனதிட்பம் உடையதாகவும் அடைந்திருக்கும் அக இலக்கியத்தில் தோழியானவள் களவு வாழ்விலும் கற்பு வாழ்விலும் சிறப்பான இடத்தை பெறுகிறாள். தலைவன் தலைவியைக் கூட்டுவிக்கும் பாலமாக அன்றி தலைவியின் பண்பை விளக்கும் கண்ணாடியாகவும், தலைவனின் பண்பு, செயல், வீரம், அன்பு ஆகியவற்றையல்லாம் தோழி பெருமித்ததுடன் தலைவிக்கு கூறுகிறாள். எட்டுத்தொகையில் களவு வாழ்க்கையில் தோழியின் உளபாங்கு என்ற இக்கட்டுரை உளவியல் அணுகுமுறையோடு அணுகி பார்க்க பட உள்ளது.*

**திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம், தலைவன், தலைவி, தோழி, உளவியல்

### முன்னுரை

ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் மனிதாபிமானத்தோடு, தோழமையாக, அன்பாக உண்மையாக, உயிருக்கு உயிராகப் பழகும் போது அவர்களிடையே இணக்கமான உறவு ஏற்படுகிறது. இச்சமுதாயத்தில் இருக்கும் உறவுகளில் மிகவும் நீடித்து நிலைக்கும் உறவு நட்புறவு ஆகும். இவர்கள் எதையும் எதிர்பார்க்காது பழகும் தன்மை கொண்ட தோழன், தோழி என்று அழைக்கப்படுவார்கள். சங்க காலத்திலும் தோழி முக்கியமான பாத்திரமாகப் படைக்கப்பட்டு உள்ளாள். அவள் தலைவன், தலைவி என்ற இரு கரைகளை இணைக்கும் பாலமாக முக்கோண வடிவத்தின் மேல் முனையாக விளங்குகிறாள். தோழி என்பவள்

செவிலியின் மகள் என்ற செய்தியை இலக்கியங்களும் இலக்கணங்களும் கூறுகின்றன. இதனை, "தோழி தானே செவிலி மகளே" (தொல். பொருள்., நு. 123) என்று தொல்காப்பியம் கூறுகின்றது. அக இலக்கியத்தில் தோழியின் உள் மன சிந்தனையும் அதனை அவள் எவ்வாறு வெளிபடுத்துகிறாள் என்பதையும் தோழியின் உளபாங்கு என்னும் இக்கட்டுரையில் காணலாம்.

**உளவியல் விளக்கம்**

உளவியல் மனிதனின் செய்கைகள், புலனுர்ச்சிகள், நடவடிக்கைகள் ஆகியவற்றை அறிய உதவும் அறிவியல் இன்றைய அவசரக்காலகட்டத்தில் மனிதர்கள் கல்வி, குடும்பம், தொழில், சமூகம் போன்ற இடங்களில் ஏற்படும் நன்மை தீமைகளால் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். மனஉளச்சல்களுக்குக் காரணங்களை கண்டறிந்து தனிமனிதனின் புலன் உணர்வு, ஆளுமை, செயல்திறன், அறிவாற்றல், நடத்தை, மனஅழுத்தம் போன்ற அனைத்துப் பிரச்சனைகளையும் ஆராய்ந்து அதற்கான தீர்வினை உரைப்பது உளவியல். மனிதனுடைய வெளிப்படையான செயற்பாடு மட்டுமல்லாது அவனுடைய சிந்தனைவளம், உணர்ச்சி வயப்படும் பாங்கு, மகிழ்ச்சி, அச்சம் அல்லது துணிச்சல் போன்ற உணர்வுகள் அனைத்தையும பற்றியும் ஒட்டு மொத்தமாக ஆய்வதை மனோதத்துவம் அல்லது உளவியல் என்கிறார் ஸ்ரீனிவாசன். மனித உள, உள்ளத்தை தன்னகத்தே கொண்ட உடல், இவ்வுலகில் தோன்றும் உணர்வுகள் அவ்வுணர்ச்சிகளின் வெளிப்பாடாக அல்லது வடிகாலாக நிகழும் நடத்தை ஆகியவற்றை உள்ளடக்கியது உளவியல் என கூறலாம்.

**உளவியல் அணுகுமுறை**

இலக்கியங்களில் காட்டப்படும் மனித மனங்களை ஆராய உளவியல் அணுகுமுறை பயன்படுகின்றது உளவியல் நோக்கில் இலக்கியத்தை பல்வேறுபட்ட கோணங்களில் அணுகி ஆராய முடிகிறது. இயல்புநிலை, கால வளர்ச்சி நிலை, உணர்ச்சி நிலை, மயக்க நிலை, தனி நிலை, ஐயநிலை, கூட்டு நிலை, சமூகநிலை, சுற்றுச் சார்பு நிலை, உறவுநிலை போன்ற பல நிலைகளை அடிப்படையாகக் கொண்டு உளவியல் சிந்தனையில் இலக்கியத்தை அணுகமுடியும். இலக்கியத்தில் காட்டப்படுகின்ற வாழ்க்கை இயல்பு உண்மைகளைச் சரியாக அறிந்து கொள்ள உளவியல் அணுகுமுறை மிகவும் உதவுகிறது. மனித மனதில் ஏற்படும் வாழ்வியல் சிக்கலையும், குழப்பங்களையும், அனுபவங்களையும் அறிந்து கொள்ள உளவியல் அணுகுமுறை பயன்படுகிறது.

**தோழி யார்?**

தோழி அக இலக்கிய முக்கோண வடிவத்தின் மேல் முனையாக விளங்குகிறாள். அவள் தலைவன், தலைவி என்ற இரு கரைகளை இணைக்கும் பாலமாகச் செயல்படுகிறாள். கனவுலகக் கடலில் தலைவியின் நெஞ்ச மரக்கலம் இடையூறு பாறைகளின் இடையில் தடுமாறும் போது, வடதுருவ விண்மீனாக விளங்கி வழி காட்டுகிறாள். தலைவனின் நெஞ்சம் மயக்க இருளினும், தளர்ச்சி, மூடுபனியனும் சிக்கித் தவிக்கும் போது அறிவுத் தீச்சுடராக

உதவுகிறாள். செவிலி சடங்கு சேற்றில் நழுவும் போது திடப்படுத்தும் ஊன்றுகோலாகத் தோன்றுகிறாள். இவ்வாறு தோழி தாயாக, தலைவியாக ஆற்றுப்படுத்துகின்றாள்.

**தோழி - பெயர் தோன்றக் காரணங்கள்**

தோழி என்ற சொல் தோன்றப் பல காரணங்கள் காணப்படுகின்றன. கலித்தொகையில் 'தோழீஇஇ" என்று அளபெடுத்து வருமிடங்கள் காணப்படுகின்றன. இதனை, "தோழீஇ காற்றுப்போல வந்த கதழ்விடைக் களியை' (கலி., பா. 103:10) என்ற பாடலின் மூலம் உரையாசிரியர்கள் காண்டல் தொழிலை உடையவள் தோழி என்று கூறுகின்றனர். தொழுது நிற்றலை உடையவள் தோழி என்றும் கூறப்படுகிறது. "கைமாண் தோளி கடுப்ப பையனெ'' (அகம்., பா. 344:5) என்று அகநானூற்றுப் பாடலில் வரிக்கூத்துக்குரிய பெண்டிருள் சிறந்தோள் தோழி ஆவாள் என்ற கருத்தையும் முன் வைப்பதை உணர முடிகின்றது.

தலைவியைச் சுற்றியுள்ள தோழியர்களுள் ஆயக்கூட்டத்தின் முதல்வியைத் தோழி என்று கூறுதலும் உண்டு. இதனை, 'ஏக்கர் ஞெண்டின் இருங்கிளைத் தொழுதி' (நற்., பா. 267) என்ற நற்றிணைப் பாடல் வழி அறிய முடிகின்றது. தலைவிக்கு தோள் போன்றவள் தோளி என்று கூறப்படுகிறது. இந்த சொல்லை பின்னர் தோழி என்று மருவியது.

**தோழியின் மன இயல்**

களவுகாலத்தில் அலரஞ்சும் தலைவியும், தோழியும் உடன்போக்கு செல்லும் காலத்தில் அவரையும் அன்னையையும் நினைத்துத் தோழி அஞ்சுவாள். ஆனால் தற்போது தலைவியைத் தலைவனுடன் உடன்போக்கு நேர்விக்கும் போது அவர் குறித்த அச்சம் நீங்கி அவள் நிகழ்ச்சியின் நுட்ப விவரங்களை அச்சமின்றி எண்ணிப் பார்க்கிறார்கள். தலைவியைத் தலைவனுடன் உடன்போக்கு துணிந்துவிட்ட தோழி அலர் குறித்த அச்ச உணர்வு நீங்க, அந்த அனுபவத்தை எண்ணிப் பார்க்கிறார்கள். களவு காலத்தில் தலைவியையும் தோழியையும் அச்சுறுத்துகின்ற வெட்கப்பட வைக்கிற ஊரலரையும், அன்னையின் அழைப்பையும் மறுக்கவோ. மறைக்கவோ இயலாது. இவ்வாறு தோழி அவர் அனுபவம் குறித்த அச்ச உணர்வினை ஒதுக்கி கவலை தணிந்து செயல்படுகிறாள்.

**தலைவிக்கும், தோழிக்கும் உள்ள நட்புறவு**

அக இலக்கியங்களில் களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் தலைவியின் செயல்பாடுகளில் முழுவதும் நிறைந்து காணப்பட்டவள் தோழியாவாள். தோழியர் பலர் தலைவியுடன் இருந்தாலும் ஒருத்தி மட்டுமே தலைச்சிறந்த தோழியாகக் கருதப்படுகிறாள். தோழி என்றது காதற்தோழியை,

**தலைமகளின் தோழியர் பலருள்ளதம்**
**இவளே களவிற்கு சிறந்தாளானகயால்**
**தானே எனப் பிரித்தார் (தொல். பொருள்., ப. 87)**

என்று புலவர் குழந்தை குறிப்பிடுகிறார். ஆகவே பல தோழியர் இருந்தாலும், களவொழுக்கத்திற்கு மிக சிறந்தவளாக இருப்பவளே தலைவியுடன் நெருங்கிய உறவுநிலை கொண்டவளாக இருப்பாள். மேலும் தோழியை நன்னர்மாக்கள் என்றும் கூறுவர் இதனை,

**நன்னர் மாக்கள் விழைவினர் ஆய்ந்த**

**தொல்நலம் இழந்த துயரமொடுளன்னதூஉம் (அகம்., பா. 197:304)**

என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகின்றது. தோழி தலைவியிடம் உரையாடுவதாக 398 கூற்றுகளையும், தலைவியின் கூற்றாக உள்ள 573 பாடல்களில் தோழியிடம் கூறுவதாக 489 பாடல்களையும் குறிப்பதிலிருந்து தலைவி தோழி நெருக்கம் புலப்படுத்தப்படுகிறது. தோழியின் இன்றியமையாத பொறுப்பு தலைவனுடன் தலைவியை இணைப்பதும், தலைவனின் பிரிவில் தலைவியை ஆற்றுவிப்பதும் ஆகும்.

**தோழிக்கும்-தலைவனுக்கும் உள்ள நட்புறவு**

தோழி தலைவனிடம் கூறும் கூற்றாக 295 பாடல்கள் காணப்படுகின்றன. தலைவன் களவொழுக்கத்தில் நெருஞ்சி மலர் போன்று இருக்கிறான்;. அவன் தலைவி தோழியிடம் மென்மையாகப் பழகுகிறான். பிறர் பார்வையில் படாமல் உறவு கொள்கிறான். அவன் எப்போதும் தலைவியையே நோக்குகிறான். தலைவன் நெருஞ்சி மலராக இருக்கும் போது தோழியும் அவனுக்கு வேலியாக இருக்கிறாள். அவன் இல்லறம் ஏற்றுப்புகழும் பொருளும் ஈட்ட பிரியும் போது அடியிடும் அவனுடைய கால்களைப் பிணக்கும் அன்பு சங்கிலியாக மாறுகிறாள். ஆவன் பரத்தமை பூண்டு நெருஞ்சி முள்ளாக மாறும் போது அவன் முள்முனை ஒறுக்கும் கை வாளாக வடிவெடுக்கிறாள். அவனை மீண்டும் மென்மை கொண்ட நெருஞ்சி மலராக மாற்றத் துடிக்கிறாள். இவ்வாறு தலைவன் தோழி உறவுநிலை அமைகிறது.

**களவுக்காலத்தில் தோழியின் பங்கு**

களவு ஒழுக்கம் பாங்கன் இல்லாமல் கூட நடைபெறும். ஆனால் தோழி இல்லாமல் நடைபெறாது. தலைவி தன்னுடைய களவொழுக்கத்தைக் கூறி நிலைப்பில் அதனை தன்னுடைய நுண்ணறிவின் துணை கொண்டு அறிகிறாள். தலைவியைத் தனது காதலை ஒத்துக் கொள்ளவும் தோழி செய்கிறாள். தலைவி தலைவனின் களவொழுக்கத்தை; தோழி அறிந்த நிலையில் மேலும் மேலும் தலைவனைச் சோதித்து அறிந்து களவொழுக்கத்தின் சிறப்பு அறிகிறாள்.

**களவு வாழ்க்கையில் தோழியின் உள செயல்பாடு**

தலைவன், தலைவியின் களவு வாழ்வில் தோழியின் உள செயல்பாடு நுட்பமாக விளக்கப்படுகிறது.

**குறை நயத்தல்**

களவு மேற்கொண்ட தலைவி தன் களவை நேராகக் கூறித் தோழியின் உதவியை வேண்டவில்லை. மாறாக மறைக்கிறாள். இதனை

**எழாஅ ஆகலின் - எழில் நலம் தொலைய**

**அழாஅ தீயோ நொதுமலர் தலையே**
**ஏனல் காவலர் மா வீழ்த்துப் பறித்த**
**பகழி அன்ன சேயரி மழைக்கண்**
**நல்ல பெருந்தோளோயே, கொல்லன்**
**எறி பொன் பிதிரின் சிறு பலதா அய்**
**வேங்கை வீ வரும் ஒங்கு மலைக்கட்சி**
**பிரிவில் அறிவு அறியா மன்னோ**
**பயில் குரல் கவரும் பைம் புறக்கிளியே (நற்., பா. 13)**

என்று கபிலர் பாடிய இப்பாடலில் நாற்றம், தோற்றம் முதலியவற்றால் தலைவியின் நிலை உணர்ந்த தோழி தலைவியிடம் நேராகக் களவை வினவவில்லை. மாறாக தான் அறிந்ததையும் நேராக கூறாமல் உள்ளுறை வாயிலாகவே தலைவிக்கு உணர்த்துகிறாள் என்பது புலனாகின்றது. இப்பகுதியில் தோழி தலைவியின் எண்ணக் குறிப்பை மனஒட்டத்தை தன் மதிநுட்பத்தால் உணர்ந்தவளாய் களவு வாழ்வில் சித்தரிக்கப்படுகிறாள்.

**குறியிடம் கூறல்**

களவுக்காலத்தில் தலைவி தன்னை சந்திக்க தலைவன் வருமாறு தோழியிடம் வேண்டுகிறாள். பகற்குறி வந்த தலைவனின் செயல்பாடு செவிலிக்கு தெரியவே, தலைவனை இரவுக்குறி வருமாறு வேண்டுகிறாள். இதனை

**யாங்கு ஆகுவமோ அணிநுதற் குறுமகள்**
**தேம்படு சாரற் சிறுதினைப் பெருங்குரல்**
**... அருவி ஆர்க்கும் பெரு வரை நாடனை**
**அறியிலும் அறியேன் காண்டறும் இலனே (நற்., பா. 147)**

என்ற நற்றினைப் பாடல் மூலம் அறிய முடிகின்றது. இவ்வாறு பகற்குறியில் சந்திக்க முடியாமல் போகும் பொழுது, இரவுக் குறியில் சந்திக்க வருமாறு தோழி கூறுகிறாள்.

**கழுக்கம் காத்தல்**

தோழியின் முக்கிய சிறப்பு கழுக்கம் காப்பதாகும். களவுக் காலத்தில் தலைவன், தலைவியைக் காண விரும்புகிறான். அப்பொழுது தோழி தலைவனுக்கு ஆற்றங்கரைப் பொழிலைத் தலைவியைச் சந்திக்கும் இடமாக கூறினாள். ஏனெனில் அவ்விடத்தில் இரையைத் தேடும் நாரையைத் தவிர வேறு யாரும் இருக்க மாட்டார்கள். இதனை

**ஊர்க்கும் அணித்தே, பொய்கை பொய்கைக்குச்**
**சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே**
**இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும்**
**துன்னல் போகின்றால் பொழிலே யாஎம்**
**கூழைக்கு எருமணம் கொணர்தம் சேறும்**
**ஆண்டும் வருகுவள் பெரும் பேதையே (குறு., பா. 113)**

என்ற பாடலின் மூலம் தலைவன் தலைவியின் களவு வாழ்க்கையை யாரும் அறியா வண்ணம் கமுக்கமாகக் காத்தாள் என்பதனை அறிய முடிகின்றது. தலைவன், தலைவியை யாரும் அவதூறு பேசிவிடக்கூடாது என்பதில் தோழி கவனமாய் இருந்தாள். இதன் மூலம் தோழி தலைவி, தலைவன் மீது கொண்டுள்ள உண்மையான அன்பினை அறிய முடிகின்றது.'

**அலர்**

தலைவனும், தலைவியும் களகொழுக்கத்தில் விரும்புவது பிறர் அறியா வண்ணம் நிகழும். எனினும் எல்லை கடந்து போகையில் ஊறார் அறியும் வண்ணமாகி விடும். இந்நிலையில் இருவரைப் பற்றியும் ஊரார் பேசுவதே அலர் எனப்படும். அந்நிலையில் நிலம் புடை பெயரினும் நீரும் தீயும் தத்தம் இயல்பு திரியினும், கடற்கெல்லை தோன்றினும் பிறழாத தலைவனின் நட்புச் சிறப்பினைக் கூறுவதோடு அவர் தூற்றும் பெண்டிரைக் கண்டு அஞ்சத் தேவையில்லை என்று தோழி எடுத்தியம்புவதனை,

**நிலம்புடை பெயரினும் தீர்தீர்ப் பிறழினும்**
**இலங்குதிரை பெருங்கடற் கெல்லை தோன்றினும்**
**வெவ்வாய் பெண்டி கௌவை யஞ்சிக்**
**கேடெவ னுடைத்தேர் தோழி (குறு., பா. 376)**

என்று தோழி தலைவனின் அன்புநிலை கூறித் தலைவியை தேற்றுகிறாள். துன்பத்தில் இருக்கும் தலைவியின் மனநிலையை அறிந்து அவளை தேற்றுகின்ற செயல்பாடாக தோழி காணப்படுகிறாள்.

**இற்செறிப்பு**

களவுக் காலத்தில் தலைவன், தலைவியின் களவொழுக்கத்தினை அறிந்து செவிலி, தலைவியை வீட்டைவிட்டு வெளியில் செல்ல அனுமதி மறுக்கிறாள். இதுவே இற்செறிப்பு எனப்படுகிறது. இந்நிலையில் தலைவனைப் பிரிந்த தலைவி வருந்துகிறாள். அதனைக் கண்ட தோழி சிறைப்புறம் வருகின்ற தலைவனுக்கு விரைவில் தலைவியை மணக்குமாறு அறிவுறுத்துகிறாள்.

**தினை உண் கேழல் இரிய புனவன்**
**சிறு பொறி மாட்டிய பெருங்கல் படாஅர்**
**ஒன் கேழ் வயப் புலி படுஉம் நாடன்**
**ஆர் தரவ ந்தனன் ஆயினும், படப்பை**
**இன் முகப்பெருங் கலை நன் மேயல் ஆரும்**
**புல் மலர்க் கான் யாற்று உம்பர், கருங்கலை**
**கரும்பு ஆட்டு வருடையொடு தாவன உகளும்**
**பெரு வரை நீழல் வருகுவன், குளவியொடு**
**கூதளம் ததைந்த கண்ணியன், யாவதும்**

**முயங்கல பெறுகுவன் அல்லன்**

**புலவி கொளீஇயர் தன் மலையினும் பெரிதே (நற்., பா. 119)**

என்ற பாடல் தலைவன் வருகின்ற வழி அச்சம் தருகின்ற வகையில் அமையும் என்று இற்செறிப்பில் இருக்கின்ற தலைவி வருந்த தோழியோ உன்னைத் திருமணம் செய்ய காலம் தாழ்த்துகின்ற தலைவன் இந்நெடு வழியைக் கடந்து வந்தும் பயன் என்ன? என்று வினவுகிறாள். ஏனென்றால், ஒரு சில நேரத்தில் தலைவியைச் சந்திக்கும் வாய்ப்பு தடைப்பட்டுப் போகவும் நேரிடலாம்.

**வெறியாட்டு**

தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாமை மிகுதியால் தலைவனை எண்ணி வருந்துவதால் உடல் மெலிந்து உணவு உண்ணாமல் தன்னிலை மறந்து திரிகிறாள். இந்நிலையில் தலைவிக்கு உடல்நிலை சரியில்லையோ அல்லது பேய் ஏதும் பிடித்து விட்டதோ என்று அஞ்சுகிற செவிலி வேலன் வெறியாட்டு நிகழ்த்துவாள். இவ்வாறு வெறியாட்டு நிகழ்த்த விருப்பதை அறிந்த தோழி செவிலியுடன் தலைவனால் வந்த நோய் என்று எடுத்தியம்புகிறாள். தோழி செவிலிக்கு குறிபோல் அன்று தலைவி தலைவனின் களவு வாழ்க்கையை வெளிப்படையாக கூறவும் வெறியாட்டு துணைபுரிகிறது.

**ஆற்றுவித்தல்**

தலைவியின் துன்பத்தைக் கூறும் பாத்திரமாகவும், அவள் துன்பத்தை நீக்கும் பாத்திரமாகவும் தோழி அமைகிறாள். துலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியை ஆற்றுவித்தல், அவளுடன் சிறு வயதிலிருந்தே பழகி வந்த உளம்கலந்த தோழியைத் தவிர வேறு யாராலும் செய்தல் இயலாது. களவு வாழ்விலிருந்து கற்பு வாழ்க்கை வரையும் தலைவியின் வாழ்வில் ஊக்குவித்து வரும் தோழியைத் தவிர வேறு யாராலும் தலைவியின் உள்ள துன்பத்தை அறிய முடியாது. ஆதனால் தான் தலைவியின் வாழ்வில் ஒன்றித் தோன்றும் தோழியே ஆற்றுவிக்கும் பொறுப்பினை முழுவதும் ஏற்க வேண்டியதாயிற்று. அறத்தோடு நின்ற பின்பு திருமணம் செய்து கொள்ளாமல் தலைவன் பொருள் தேடி நெடுந்துரம் பிரிந்து போனான். அந்நிலையை ஆற்றாத தலைவிக்குத் தோழி கார்காலம் வந்துவிட்டது. தலைவர் இனி வந்து உன்னை மணம் புரிவார் நீ வருந்தாதே என்று ஆற்றுபடுத்துவதனை நற்றிணைப் பாடலானது.

**சூருடை நனற் தலச் சுனைநீர் மல்க**

**பெரு வரை அடுக்கத்து அருவி ஆர்ப்ப**

**கல் அலைத்து இழிதரும் கடுவரற்கான் யாற்று**

**தன் நறுஞ் சிலம்பில் துஞ்சும்**

**சிறியலைச் சந்தின வாடு பெருங்காடே (நற்., பா. 7)**

என்ற வரிகள் மூலம் எடுத்தியம்புகிறது. களவு வாழ்விலிருந்து கற்பு வாழ்க்கை வரையும் தலைவியின் வாழ்வில் ஊக்குவித்து வரும் தோழியைத் தவிர வேறு யாராலும் தலைவியின்

உள்ள துன்பத்தை அறிய முடியாது. ஆதனால் தான் தலைவியின் வாழ்வில் ஒன்றித் தோன்றும் தோழியே ஆற்றுவிக்கும் பொறுப்பினை முழுவதும் ஏற்க வேண்டியதாயிற்று.

**அறத்தோடு நிற்றல்**

களவு வாழ்க்கை கற்பாக மாற தோழி மேற்கொள்ளும் முயற்சியாக அறத்தோடு நிற்றல் அமைகிறது. தலைவியிடம் கண்ட மேனி வேறுபாட்டினால் அவளைத் தாய் இற்செறித்தாள் இந்த மெலிவிற்கு காரணம். அறிய, வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த எண்ணினாள். அதனை அறிந்த தோழி அவளுக்கு உண்மையை உணர்த்த விரும்பி, துணிந்து அறத்தோடு நிற்கிறாள். எவ்வாறெனில் தோழி தலைவியிடம் அன்னையின் அறியாமைச் செயல் மேலும் துயரம் விளைவிக்குமேயன்றி வேறு நன்மை விளையாதென்பதனை அவள் அறியாளே எனச் சொல்லி கேட்கும்படி கூறுகிறாள். இதன் மூலம் தோழி தலைவியின் களவு வாழ்க்கையை வெளிப்படுத்தும்போது மனதிட்பம் உடையவளாக துணிச்சலாக, செயல்படும் நிலை காணப்படுகிறது.

**வரைவு கடாதல்**

வரைவு கடாதல் தோழியின் இன்றியமையாத செயலாதலால் அனைத்து இலக்கண நூல்களும் இதனைப் பற்றி விரிவாகவே ஆராய்கிறது. தலைவனிடம் தோழி வரைவு கடாவும் சொற்களை பேசும் போது அவளது உள்மன செயல்பாடு பிரதிபலிக்கிறது. இதனை

**வரைதல் வேண்டி தோழி செய்ய**
**புரைநீர் கிளவி புல்லிய எதிரும் (தொல். இளம்., நூ. 105:11-12)**

ஏன்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் தெளிவுப்படுத்துகிறது. வரைவு கடாதலே தோழியின் நோக்கமாதலால் இத்துறையில் தான் தோழி தலைவனிடம் கூறும் கூற்றும் அதிகமாக உள்ளது வரைவுகடாதல் நிலையில் தோழியின் கூற்று பெரும்பாலும் தலைவனின் அருளை வேண்டும் நிலையில் இருந்தாலும், அதில் கடியும் நிலையும் அமைகிறது. துலைவியை அருளாமையால் கொடியவன், வன்கணாளன், சொன்னாளன், நாணலி அன்பிலாளன் எனப் பழிக்கப்படுகிறான். வுரைவதில் காலம் தாழ்த்தும் போது தோழி தலைவனை நேரடியாகவே கடிகிறாள்.

**வல்லை மன்ற பொய்தல்**
**வல்லாய் மன்ற நீ அல்லது செயலே (ஐங்., பா. 287)**

என்ற வரிகளில் தலைவன் தலைவியை குறித்ததொடு நாளில் வரைவதாக உறுதி கூறுகிறான். ஆனால் சொன்னவாறு செய்யவில்லை. எனவே தோழி தலைவனை நீ பொய் சொல்வதில் வல்லவன் என்பது தெளிவு அவ்வாறே மாறானவற்றை செய்வதில் ஆற்றலுடையாய் அல்லை என்பதும் தெளிவே என்று இழித்துரைத்தாள். இவ்வாறு கூறினால் தலைவன் வெட்கித் திருமணத்திற்கு ஆவண செய்வான் எனத் தோழி எண்ணினாள். இப்பகுதியில் தோழி தன்னுடைய எண்ணம் நிறைவேற தலைவனின் பண்புகளுக்கு மாறான மனதுண்டலை தூண்டுவதாக காணப்படுகிறது.

**தொகுப்புரை**

அக இலக்கியத்தில் தோழியானவள் தலைவிக்காக படைக்கப்பட்ட பாத்திரமாகவும் நெருங்கிய உறவு கொண்டவளாகவும் சித்தரிக்கப்படுகிறாள். தோழியானவள் தலைவன்-தலைவியின் களவு வாழ்க்கையில் மேற்கொள்ளும் செயல்பாடுகள், மன உணர்வு உணர்ச்சி வெளிப்பாடு போன்றவை உளவியலின் நடத்தைகளாக காணப்படுகின்றன. களவு வாழ்க்கையில் ஈடுபடும் ஒவ்வொருவரின் மனநிலைகளை நன்கு அறிந்து, அதனை எவ்வாறு கையாளவேண்டும் என்றும் நுணுக்கமாக ஆய்ந்து அறிந்து சுயநலமில்லா பொதுநிலை கொள்கையோடு உறவை உருவாக்கும் பாத்திரமாக காணப்படுகிறாள். எட்டுத்தொகை அக இலக்கியங்களில் அனைத்து பாடல்களிலும் தோழியின் மனஉணர்வு, உளவியல் நடத்தைகள் வெளிப்படுகின்றன என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

**குறிப்புகள்**

[1] செயபால், இரா. *சங்க இலக்கியம் – அகநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு – 2004.

[2] தட்சிணாமூர்த்தி. *சங்க இலக்கியம் – ஐங்குறுநூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு – 2004.

[3] நாகராஜன்.வி. சங்க இலக்கியம் – குறுந்தொகை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு – 2004.

[4] பாலசுப்பிரமணியன், கு.வெ. *சங்க இலக்கியம் – நற்றினை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு – 2004.

[5] விஸ்வநாதன், அ. சங்க *இலக்கியம் – கலித்தொகை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு – 2004.

[6] இளம்பூரணர். *தொல்காப்பியம் – பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், சென்னை, 11-ஆம் பதிப்பு – 2014.

[7] புலவர் குழந்தை. *தொல்காப்பியம் – பொருளதிகாரம்*. பாரிநிலையம், சென்னை, முதற்பதிப்பு – 1962.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.